**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**Case No. MCOP. 61/2018**
**Deposition of P.W.2**

Name : இளன் சேரன்
S/o, D/o, W/o :
Caste :
Religion :
Village :
Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
**Dated: 06.10.2023**

**முதல் விசாரணை-**

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சி ஆவேன். இம்மனு சம்மந்தமாக எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

3 மற்றும் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இம்மனுவில் மனுதாரர் கிடையாது. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. மனு விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற வழக்கில் நான் சாட்சியாக காண்பிக்கப்படவில்லை. மனு விபத்தின் போது இருசக்கர வாகனத்தில் அசினோடு சேர்ந்து எத்தனை பேர் பயணம் செய்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. ஆனால் விபத்தை பார்த்தேன். இவ்வழக்கில் யார், யார் தரப்பினர்கள் என்பது எனக்குத் தெரியாது. இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றவர் தான் அதிவேகமாகவும், கவனகுறைவாகவும் வலது புறமும் ஓட்டி சென்று மாருதி சிப்ட் காரின் மீது மோதினார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மாருதி சிப்ட் காரை காரின் ஓட்டுனர் நிதானமாகவும், கவனமாகவும் சாலைவிதிகளை கடைபிடித்தும் ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. விபத்து நடைபெற்ற இடத்தில் அதற்கு எதிரே உள்ள கடையில் உள்ள கடையில் நான், கடை உரிமையாளரிடம் பேசிக்கொண்டிருந்த போது மனு விபத்து நடைபெற்றது- மேற்படி கடையின் உரிமையாளர் பெயர் சசிகுமார். மேற்படி சசிகுமார் மனு விபத்தின் போது அவரது கடையில் தான் இருந்தார். மனு விபத்து நடைபெற்ற உடன் அங்கு ஆட்கள் கூடி விட்டார்கள். நான் சத்தம் கேட்டு சம்பவத்தை பார்த்தேன்.

விபத்தில் காயம் அடைந்தவரை நான் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்க்கவில்லை. ஆனால், Fire Service வாகனத்தில் நான் காயம்பட்டவரை ஏற்றி அனுப்பினேன். நான் சம்பவ இடத்தில் கிடையாது என்றும், விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் காயம்பட்ட நபரை சிகிச்சைக்காக வாகனத்தில் அனுப்பி வைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையில் சம்பவ இடத்தில் நான் இருந்திருந்தால் மேற்படி இருசக்கரவாகனத்தில் மூன்று நபர்கள் பயணம் செய்ததை நான் பார்த்து இருந்து இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. காயம்பட்ட நபருக்கு மருத்துவமனையில் சிகிச்சைக்காக நான் உடன் இருக்கவில்லை. காயம்பட்ட நபருக்கு நான் மருத்துவ சிகிச்சைக்கு பணம் செலவு செய்யவில்லை. நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ளது போன்று மனு விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் எனக்கு உறவினர் கிடையாது. மனுதாரரின் தகப்பனார் எனக்கு நண்பர்.